ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1715/27 - 2011 ජූලි 22 වැනි සිකුරාදා - 2011.07.22
*1715/27 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையில் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65அ (1) ஆம் பிரிவின் கீழ், அகுரடியகே நிமல் சந்திரசிறி எனும் துணைத் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலக்கெடுவுக்குள் துணைத்தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால், அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. எஹலமல்பே முதியன்சேலாகே ஜயதிஸ்ஸ பண்டார எஹலமல்பே என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் யு. அமரதாச ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. எஹலமல்பே முதியன்சேலாகே ஜயதிஸ்ஸ பண்டார எஹலமல்பே என்பவர், கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

யு. அமரதாச,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கண்டி கடவத் சதரயும் கங்கவட்ட கோரளே பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
2011, யூலை 15.

*8 - 173*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.